தலைப்பு 252 – தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்

---

**1.** நிதிக்கூற்றுக்கள்

**1.1** முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் அடங்கிய பொழிப்பு அறிக்கை கணகீட்டு உத்தியோகத்தரிற்கு 2019 மே 31 ஆந் திகதி வழங்கப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 யூன் 20 ஆந் திகதி வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தினன் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2** அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும்

உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) இன் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு
------------------------------------------------------------------------------------------------------------------------

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்குபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் முன்னிலைப்படுத்தும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தர் தெரியப்படுத்தப்பட்டுள்ளனர்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவின் பின்வரும் விடயங்கள் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முதற் தடவையாக சமர்பிக்கப்பட்டமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யப்படவில்லை.

(ஆ) தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் தேவைப்பாடொன்று இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி நிலைமைக் சுற்று

பின்வரும் அவதானிப்பகள் கண்டறியப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பயணிகள் வாகனங்களின் பெறுமதி ரூபா.238,450,000 ஆக உள்ளதாக நிதி அல்லா சொத்துகள் கூற்று காட்டுகின்றது. இருப்பினும் கண்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட வாகனங்களின் அட்டவணையின் பிரகாரம் 54 பயணிகள் வாகனங்களின் பெறுமதி ரூபா.236,950,000 ஆக காணப்படுவதுடன், ரூபா.1,500,000 வேறுபாடு காணப்படுகின்றது. | சொத்துகளின் பெறுமதி துல்லியமாக கணக்கிடப்பட வேண்டும். | 54 வாகனங்களினதும் கொள்வனவுப் பெறுமதி 30 யூன் 2019 ற்கு முன்னர் கணக்கிடப்படுவதன் ஊடாக வேறுபாட்டை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | நிதி அல்லா சொத்துகள் கூற்று மற்றும் பொது பேரேட்டிற்கும் இடையில் ஏனைய இயந்திரம் மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா.3,453,953 வேறுபாட்டுள்ளது. | வேறுபாடுகளை அடையாளம் கண்டு செம்மையாக்காவும். | 30 யூன் 2019 சொத்துகள் அறிக்கையில் சொத்துகளின் அரம்ப மீதி சேர்த்துகொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. |
| (இ) | நிதி அல்லா சொத்துகளின் 31 திசம்பர் 2017 ல் உள்ளவாறான மற்றும் 01 சனவரி 2018 ல் உள்ளவாறான பெறுமதிகளிற்கு இடையில் ரூபா.799,399,949 | தொடர்புடைய தகவல்களுடன் போதுமான வெளிப்படுத்தல்கள் செய்யப்பட வேண்டும். | இம் மாற்றங்களிற்கான காரணங்களை 2018 ஆம் ஆண்டின் நிதி அல்லா சொத்துகள் நகரும் அறிக்கையில் குறிப்பிட |

| | | | |
|---|---|---|---|
| | காணப்பட்ட வேறுபாட்டிற்கு நிதி அறிக்கையுடன் விளக்கங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. | | தவறவிடப்பட்டுள்ளது. |
| (ஈ) | புத்தகங்கள், சஞ்சிகைகள் மற்றும் நாவல்களின் ஆரம்ப நிலுவை குறிப்பிடப்படாததுடன் மதிப்பாய்வு மேற்கொள்ளப்பட்ட ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டவை மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், நூலக புத்தகங்களிற்கான வருடாந்த கணக்கெடுப்பு சபை அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | வருடாந்த கணக்கெடுப்பு சபை மேற்கொள்ளப்பட்டு சொத்து மதிப்பு சரியாக கணக்கிடப்பட வேண்டும். | சிகாஸ் நிகழ்ச்சித்திட்த்தில் (CIGAS Program) ஆரம்ப மீதிகள் உள்ளிட நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்ற, அதேசமயம் வருடாந்த கணக்கெடுப்பு சபை முடிக்கப்பட்டுள்ளது. அவ் அறிக்கை கணக்காய்விற்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும். |

**1.6.2.** காசுப் பாய்ச்சல் சுற்று

பின்வரும் அவதானிப்பகள் கண்டறியப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வைப்பு கணக்கு மற்றும் ஏனைய பொறுப்புகள் மாற்றங்களின் பெறுமதியானது ரூபா.4,074,267 ற்கு பதிலாக ரூபா.1,516,536 ஆகா காட்டப்படுவதால், காசுப் பாய்ச்சல் கூற்றில் தேறிய காசு ரூபா.2,557,731 ஆல் குறைத்துப் பெறுமதியிடப்பட்டுள்ளது. | காசுப் பாய்ச்சல் கூற்று சரியாக தயாரிக்கப்பட வேண்டும். | பதில்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1. செலவின முகாமைத்துவம்.

பின்வரும் அவதானிப்பு கண்டறியப்பட்டுள்து.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மூலதன செலவினத்தின் மேலதிக ஏற்பாடு காரணமாக, பயன்பாட்டின் பின் ஏற்பாட்டின் 35.73 சதவீதம் நிலுவை காணப்பட்டது. | வருடாந்த மதிப்பீடுகள் யதார்த்தமாகவும் சாத்தியப்பாட்டுடனும் தயாரிக்கப்பட வேண்டும். | பதில்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. |

### 2.2. அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்க கூற்று

பின்வரும் அவதானிப்பு கண்டறியப்பட்டுள்து.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலுவைக்கடன் மீதியில் உள்ளடக்கியிருந்த விலகிய 16 அலுவலர்களுடைய ரூபா.790,809, நோய்வாய்ப்பட்ட 05 அலுவர்களது ரூபா.404,642, மற்றும் இடமாற்றம் பெற்ற 03 அலுவர்களது ரூபா.72,200 வசூலிக்கப்படாததுடன், அந் நிலுவைகள் தவிர ரூபா.373,330 பெறுமதியான கடன் மீதிகள் 05 வருடங்களிற்கு மேலாக நிலுவையாக உள்ளது. | கடன் நிலுவையை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த கடன் நிலவைகளை வசூலிப்பதற்கான விசாரணைகள் தற்போதும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. |

2.3 வைப்பு மீதிகள்

பின்வரும் அவதானிப்பகள் கண்டறியப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ஒரு வைப்பு கணக்கில் 31 திசம்பர் 2018 ல் உள்ளபடியான 10 மீதிகளின் பெறுமதியான ரூபா.4,967,342 மூன்று வருடங்களிற்கு மேலாக உள்ளது. | பொது வைப்பு கண்க்கின் நீண்டகால மீதியானது உடனடியாக தீர்க்கப்படவேண்டும். | சம்ந்தப்பட்ட நிறுவனங்களிற்கு அறிவிக்கப்பட்டும், குறைபாடுகளை சரி செய்ய எவ் நடவடிக்கை மேற்கொள்ளப்படாமையால், குறைபாடுகளை சரி செய்ய புதிய மதிப்பீடுகள் கோரப்பட்டுள்ளன. |
| (ஆ) | திணைக்கள அதிகாரிகளிற்கு சலுகை அடிப்படையில் மோட்டார் சைக்கிள்களை வழங்குவதற்கான சென்மதி சுங்க தீர்வை ரூபா.8,766,108 வைப்புக் கணக்கில் 31 திசம்பர் 2018 ல் உள்ளதுடன் அதற்அப்பால் மீதி ரூபா.8,588,927 ஒருவருடத்திற்கு அதிகமாக உள்ளது. | எஞ்சிய நிலுவைகளை தீர்க்கப்பட வேண்டும். | சுங்க திணைக்களத்திற்கு காசாகவோ அல்லது குறுக்கு பதிவு மூலமோ குறித்த சுங்க தீர்வையினை செலுத்துவதற்கான அனுமதியினை திறைசேரி செயற்பாடுகளிடமிருந்து ஏற்கனவே திணைக்களம் கேரியிரக்கின்றது. அதற்குரிய அனுமதி கிடைக்கப்பெற்றதும் தீர்வையானது விடுவிக்கப்படும். |

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1. தொலைநோக்கு மற்றும் செயற்பணி

பின்வரும் அவதானிப்பு கண்டறியப்பட்டுள்து.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டிற்கான செயற்திறன் அறிக்கை மீளாய்வு செய்யும் போது, பின்வரும் விடயங்கள் தொடர்பில் நாளதுவரைப்படுத்தப்பட்ட தகவல்கள் முன்னிலைப்படுத்தப்படவில்லை.<br>. தொழிற்துறை நடத்தை – 2015.<br>. வருடாந்த வியாபார மற்றும் சேவைகள் கணக்கெடுப்பு - 2016.<br>. வருடாந்த கட்டுமான தொழில் கணக்கெடுப்பு – 2016. | நாளதுவரைப்படுத்தப்பட்ட தகவல்களை வழங்கவதற்கு முயற்சிக்க வேண்டும், ஏனெனில் திணைக்களத்தின் செயற்பணியானது உரிய நேரத்தில் தகவல்களை வழங்குவதாகும். | தரவுகள் அட்டவணை இறுதிப்படுத்தப்பட்டிருந்தாலும், செயற்திறன் அறிக்கை தயாரிக்கும் நேரத்தில் தரவுகள் வெளியிடப்பட்டிருக்கவில்லை. ஆகையினால் செயற்திறன் அறிக்கையில் 2016 ஆம் ஆண்டு தரவுகள் அட்டவணை உள்ளடக்கப்பட்டது. |

3.2. திட்மிடல்

பின்வரும் அவதானிப்பு கண்டறியப்பட்டுள்து.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திருத்தப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், வருடாந்த இறுதி கணக்கெடுப்பு அறிக்கை வழங்கப்படும் திகதி சரியாக குறிப்பிடப்படவில்லை. இதன் காரணமாக, 03 வருடாந்த கணக்கெடுப்பு அறிக்கைகள் 31 திசம்பர் 2018 ல் முடிவுறுத்தப்படவில்லை. | செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கும் போது, கணக்கெடுப்புகளின் இறுதி அறிக்கை வழங்கப்படும் திகதி குறிப்பிடப்பட வேண்டும். | கணக்கெடுப்புகளின் இறுதி அறிக்கைகள் வழங்குவதில் ஒரு கால தாமதம் காணப்பட்டது. |

**3.3.** சொத்து முகாமைத்துவம்.

பின்வரும் அவதானிப்பு கண்டறியப்பட்டுள்து.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா.17,330,000 பெறுமதியான 05 பாவிக்க முடியாத நிலையிலுள்ள வாகனங்கள் காணப்பட்டன. அவற்றில் ஒன்று 2014 ஆம் ஆண்டிலும் முன்று 2017 ஆம் ஆண்டிலும் பாவனையிலிருந்து நீக்கப்பட்டது. | போக்குவரத்திற்கு தகுதியற்ற வாகனங்கள் அகற்றப்படவேண்டும். | அகற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |

3.4. அரச உத்தியோகத்தர்களின் பிணை வைப்பு.

பின்வரும் அவதானிப்பு கண்டறியப்பட்டுள்து.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நி.பி. 880(1) ன் பிரகாரம் பிணை வைப்பு செய்யவேண்டிய அலுவலர்களால் அவ்வாறு செய்யபடவில்லை. | நிதிப் பிரமாணங்கள் கடைப்பிடிக்கப்பட வேண்டும். | அந் நடவடிக்கை ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |

3.5. நட்டங்களும் சேதங்களும்.

பின்வரும் அவதானிப்பு கண்டறியப்பட்டுள்து.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| அலுவலர்களிற்கு வழங்கப்பட்டு அவர்களால் தொலைக்கப்பட்ட ரூபா.317,466 உடைய 04 டப்லட் கணணிகளின் நட்டம் (Tablets Computers) மீட்கப்படவில்லை. 31 திசம்பர் 2018 வருடாந்த கணக்கெடப்பு சபை அறிக்கையில் அச் சோர்வு குறிப்பிடப்படவில்லை. | நட்டம் தெழிவாக ஆவணப்படுத்தப்படுவதுடன் நட்டத்தை மீட்க உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்கெடுப்பு சபை உரிய நேரத்தில் மேற்கொள்ள மாவட்ட அலுவலகங்களிற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன் சம்பளத்திலிருந்து ஒரு பகுதியை வசூலிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

3.6. சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்பு கண்டறியப்பட்டுள்து.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| விபத்திற்கு பின்னர் பழுதுபார்ப்பது பொருளாதார ரீதியாக சாத்தியமற்றது என உள்ளளூர் முகவர் தெருவித்ததற்கு பின்னர் 2015 ஆம் ஆண்டில் வாகனம் ரூபா. 1,514,625 தொகைக்கு பழுதுபார்க்கப்பட்டது. வாகனம் இயங்கும் நிலையில் இல்லாததுடன் சேதத்தை திசம்பர் 2018 ற்குள் அறவிடவுமில்லை. மேலும் காப்புறுதி செலவுகள் 2017 மற்றும் 2018 ல் முறையே ரூபா.44,284 மற்றும் ரூபா.50,999 | 5 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் இழப்பை வசூலிக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மேலதிக செயலாளர் (நிர்வாகம்) அவர்களால் இரணடு வாரங்களிற்கள் வாகனம குறித்த அறிக்கையை நிறைவு செய்து அறிகையை வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது, ஆனால் அவ் அறிக்கை இன்னமும் பெறப்படவில்லை. மேலதிக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

செலுத்தப்பட்டது.

4. மனித வள முகாமைத்துவம்.
-----------------------------------------------

பின்வரும் அவதானிப்பு கண்டறியப்பட்டுள்து.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டின் இறுதியில், ஆளணியில் 442 வெற்றிடங்கள் உள்ளன. இது அங்கீகரிக்கப்பட்ட ஆளணியில் 24 சதவீதமாகும். | வெற்றிடங்களை நிரப்பவதற்கான நடவடிக்கை அல்லது அனுமதிக்கப்பட்ட ஆளணியை மறுசீரமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேணடும். | வெற்றிடங்களை நிரப்பவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |